**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 7** |
| **Name** | : | **திரு. மனையழகன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.03.2024**

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். camera man ஆக ஜனம்தமிழ் மீடியாவில் வேலை செய்து வருகிறேன். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கடந்த 2016 முதல் 2018 ம் ஆண்டு வரை M.Sc.,இதழியல் மற்றும் Science communication படித்து வந்தேன். 26.09.2017 ம் தேதி காலையில் நாங்கள் வழக்கம் போல் அன்று காலை சுமார் 10.00, 10.15 மணியளவில் எங்கள் வகுப்பில் இருந்தோம். அப்போது sound கேட்டது. அப்போது classmates எல்லாரும் சென்று பார்த்தபோது மேம் அவங்க ரூமில் இதழியல் துறையில் துறை தலைவர் அறையில் இரத்தமாக இருந்தது. நாங்கள் விசாரித்தபோது, guest lecturer ஆக வேலை பார்த்த ஜோதிமுருகன் என்பவர் வேலை விஷயமாக பிரச்சனை என்பதால் குத்தி கொலை முயற்சி பண்ணார். அதன் பின் போலிசார் வந்து

விசாரித்தார்கள். அவர் அங்கு இல்லாததால் நாங்கள் காலேஜ், வெளியே மற்றும் அவர் வழக்கமாக செல்லும் இடங்களில் சென்று பார்த்தேன். அப்போது அவர் எங்கள் கல்லூரிக்கு அருகே வடபழஞ்சி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தார். நான் தான் அவரை என்னுடன் வந்த நாகமலைபுதுக்கோட்டை போலிசாருக்கு அடையாளம் காண்பித்தேன். அதன் பின் அவரை அங்கேயே விசாரணை செய்து கைது செய்தார்கள். அவரிடம் இரவு 08.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் வாக்குமூலம் வாங்கினார்கள். அப்போது என்னுடன் எங்கள் junior பையன் ரேகசௌந்தர் என்பவருடம் உடன் இருந்தார். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.5 ஆகும்.** எதிரியிடம் இருந்து black colour bajaj pulsar இரு சக்கர வாகனத்தை போலிசார் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். **26.09.2017 ம் தேதி 21.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சி அதசாஆ.6 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள black colour bajaj pulsar இரு சக்கர வாகனம் எதிரியுடையது தான். அந்த வண்டியின் பதிவெண் TN 59 U 7148 ஆகும். **அந்த போட்டோ அசாபொ.9 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை